## தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை

திருவள்ளுவர் ஆண்டு 2056 / ஸ்ரீ விசுவாவசு வருடம் / ஆடி - 28

மூ.மு.எண்.4282 / அ1 / 2025 நாள்.13.08.2025.

**பொருள்** பள்ளிக் கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - **திருமதி.த.சரண்யா**, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம், தருமபுரி மாவட்டம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை**

1. அரசு கடிதம் (e-file) எண்.6309 / க.ஆ.ப / 2024 / 1 பள்ளிக் கல்வித் துறை நாள்.07.08.2024.
2. தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.05916 / அ1 / 2023 நாள்.27.09.2023.
3. கிருஷ்ணாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.85 / 2025 நாள்.25.06.2025.

**********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி-IV தேர்வில் தேர்ச்சி பெற்று நேரடி நியமனம் மூலம் பார்வை 02இன்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு தருமபுரி மாவட்டம், கிருஷ்ணாபுரம், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் **திருமதி.த.சரண்யா** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட கோரி பார்வை 03இன்படி சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் கருத்துரு பெறப்பட்டுள்ளது.

எனவே, சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரின் பரிந்துரையின் அடிப்படையிலும், அன்னாரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் மற்றும் தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ்களுக்கு உண்மைத்தன்மை அறியப்பட்டு சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016இன் பிரிவுகள் 30 மற்றும் 31இன்படி நியமன அலுவலர் அளவிலேயே பணிவரன்முறை ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள பார்வை 01இல் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் கீழ்க்காண் இளநிலை உதவியாளருக்கு அவர் பெயருக்கெதிரில் கலம் 5இல் குறிப்பிட்டுள்ள நாளில் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகத்தின் பெயர் | நியமன முறை | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 163 | **திருமதி.த.சரண்யா,** இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம், தருமபுரி மாவட்டம். | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

(த.பி.பா-2)

இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும்.

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளர் சார்பாக பெறப்பட்ட அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. ஆணை மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : அசல் பணிப்பதிவேடு-02 தொகுதிகள்.

13/08/2025

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி.

13/08.2025

3/3

பெறுநர்

தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம், தருமபுரி மாவட்டம்.

நகல்: திருமதி த சரண்யா, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, கிருஷ்ணாபுரம், தருமபுரி மாவட்டம். (உரிய வழியாக)